அனுப்புநர்

திருமதி.ஏ. மாலதி
ஆணையாளர்,
புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்,
(இ)சிட்லபாக்கம்.

பெறுநர்

ஊராட்சி மன்ற தலைவர்,
ஒட்டியம்பாக்கம் ஊராட்சி,
புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்.

ந.க.எண்.1999/2024/அ4 நாள். 27.06.2024

அய்யா,

பொருள் - திட்ட அனுமதி - செங்கல்பட்டு மாவட்டம் - புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் - ஒட்டியம்பாக்கம் ஊராட்சி, அரசன்கழனி கிராமம் - Layout Division – Proposed for sub-division of house sites in S.No.9/1D2 of Ottiyambakkam Panchayat, of Ottiyambakkam Village, Tambaram Taluk, Chengalpattu District, St.Thomas Mount Panchayat Union Limit - வீட்டு மனைகள் அமைப்பதற்கு திட்ட வரைபட அனுமதி ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது - ஊராட்சி மூலம் உரிய அனுமதி வழங்குவதற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைத்தல் சார்ந்து.

பார்வை - 1) உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், எண்.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை - 600 008. அவர்களின் Letter No.Layout-1/0051/2024, Dated: 25.06.2024.

2)திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள்

******

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி, செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், ஒட்டியம்பாக்கம் ஊராட்சி, அரசன்கழனி கிராமம், Layout Division , Proposed for sub-division of house sites in S.No.9/1D2 of Ottiyambakkam Panchayat, of Ottiyambakkam Village, Tambaram Taluk, Chengalpattu District, St.Thomas Mount Panchayat Union Limit என்பவருக்கு உள்ளாட்சி அமைப்பு மூலம் ஒப்புதல் பெற்று 17 வீட்டு மனைகள் அமைப்பதற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் திட்ட அனுமதி மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி புல எண்களில் வீட்டு மனைகள் அமைப்பதற்கு திட்ட அனுமதி அளிக்கப்பட்ட திட்ட வரைபட அனுமதி வரைபடங்கள் மற்றும் பர்மிட் அசலாக இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. மேற்படி மனுதாரரிடம் உரிய கட்டணங்களை அரசு விதிமுறைகளின்படி வங்கி வரைவாக வசூலிப்பதுடன் பார்வை 1ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு -

1.திட்ட அனுமதி அளிக்கப்பட்ட வரைபடம் (அசலாக)
2.திட்ட அனுமதி பர்மிட் (அசலாக)
3.பார்வையில் காணும் கடித நகல்

ஆணையாளர்
புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்
(இ)சிட்லப்பாக்கம்

நகல்

1)உறுப்பினர் செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
எண்.1, காந்தி இர்வின் சாலை
எழும்பூர், சென்னை -8.

2) M/s. Vigneshwara Homes Pvt. Ltd.
Rep. by Thiru.NRK Venkat
GPA on behalf on N.Ravi & S. Manimegalai
No.15/33, Cenotaph 1st Street
Teynampet, Chennai - 600 018.
(ஒட்டியம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களை அணுகி
ஒப்புதல் பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது)

ஒட்டியம்பாக்கம் முதல் நிலை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. **வீ. சரண்யாவீரபாபு**

கி.ஊ.எண்.32/2024-2025 நாள் : 27.06.2024

பொருள் : மனைப்பிரிவு / மனை உட்பிரிவு புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் - ஒட்டியம்பாக்கம் ஊராட்சி ச. எண்.....9/102..... மனைப்பிரிவு / மனை உட்பிரிவு அனுமதி வழங்குதல் தொடர்பாக

பார்வை : 1. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை - 7. அவர்களது கடிதஎண்.....1/0051/2024.....நாள்.....05.06.2024.....

2. ஆணையாளர் புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ப.மு.எண். 1999/2024/JH1 நாள். 27.06.2024

உத்திரவு :

பார்வையிட கட்டிய கடிதத்துடன் பெரப்பட்ட வரைப்படங்கள் பரிசிலிக்கப்பட்டு சுற்றியுள்ள மனைகள் சாலைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்டு ஒதுக்கீட்டின் கீழ்கண்ட கட்டிட மற்றும் மனைப்பிரிவு / மனை உட்பிரிவு விதிகளுக்கு உட்படுத்தி ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இதற்கான செலுத்தியாக கட்டணம் ரூ.....132/22/-.....(ரூபாய் .....). செலுத்தியமைக்கான பலவகை ரசீது எண்.....நாள்.....27.06.2024..மற்றும் அங்கிகரிக்கப்பட்ட வரைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

நிபந்தனைகள் :

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கிகரிக்கப்பட்ட வரைப்படம் ப.மு.....1999.....ன்படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப் பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரியினால் நிற்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கபட வேண்டும். அதோடு தகுந்த சிறுப்பானங்கள் சாக்கடை வடிகால் துப்புரவு தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்து தர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.

2. தெரு முனையில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கிகரிக்கப்பட்ட வரைபடத்தின் படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

3. அங்கிகரிக்கப்பட்ட வரைப்படத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே

பயன்படுத்த வேண்டுமல்லாத கட்டிடம் பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லது குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கில்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்த கூடாது.

4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

5. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மாட்டத்திலிருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாத சுற்றுசுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமே சுவரோ கட்டக்கூடாது.

6. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்த வெளியில் கிணறு மல அறை எருக்குழி மாட்டு தொழுவம் உந்து வண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்றவை குடியிருப்பு அல்லது அதை சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம் ஆனால் கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின் பக்கம்.....பக்கத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

7. மனையின் பரப்பின் 50 சதத்திற்கு மேல் கட்டிடம் கட்டக்கூடாது.

8. கடக்கால் போட தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்த வேண்டும் நிலச்சரியை நேர் செய்யவே மனையிலிருந்து மண்தோண்டி எடுத்து பள்ளங்களை ஏற்படுத்தக்கூடாது.

9. மனையின் சொந்தகாரர்கள் மேற்படி வீடுகட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்துக்கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் சட்டதிட்டங்கள் விற்பனை பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

10. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படங்கள் இத்துடன் இணைக்கப்படுகிறது.

V. Somu
தலைவர்
ஒட்டியம்பாக்கம் ஊராட்சி
புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்

27/6/24

இணைப்பு மனைப்பிரிவு வரைப்படம்

பெறுநர்:

திரு/திருமதி M/s. Vigneshwara Homes Pvt. Ltd
Rep by Thiru. NRK. Venkat
GPA on behalf of N. Ravi & S. Manimegalai
No: 15/33 Cenotaph 1st street Teynampet
Chennai - 600018.